பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—6 குருகுலம், மாம்பாக்கம் ; விசய, பங்குனி; 26—3—54 தளிர்—23

14 APR 1954

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அடக்கத்தின் ஆற்றல்

வில்லின் வளைவு அம்பின் வேகத்துக்கு ஆற்றல் தருகின்றது. எட்டிப் பாயும் ஏனவையும் முதலில் அடக்கத்துடன் பின்வாங்கி, முன் வீறுதலை யாரும் அறிந்திருப்பர். அடக்கத்தின் ஆற்றலுக்கு இவையெல்லாம் எடுத்துக் காட்டு ஆனால், அந்த ஆற்றல் நன்மையிற் செல்லுதல் முதன்மையாகும்!

அடுப்பில் ஏற்றிய உலை நீரின்மேல் ஒரு தட்டு இட்டு மூடினால், விரைவில் அது கொதி வரும்; மூடாவிட்டால் விரைவில் கொதி வாராது. காய்களாக உள்ள சிலவற்றை ஒரு கலத்தில் இட்டு மூடி வைத்தால் சில நாட்களில் பக்குவமாகிப் பழுத்துவிடும். எதுவும் அடக்கம் பெற்று உள் ஆற்றல் கொண்டால், கனிந்து பயன்படும் பெருமையில் திகழ்தல் கண்கூடு!

செடிகளில் மலர்கள் முதலில் இதழ் குவிந்த மொக்குகளாய் அரும்பி, அவ்வடக்கத்திலிருந்து சிறிது சிறிதாக விரிந்து நாலா பக்கமும் மணம் பரப்பி வண்டுகளையும் மக்களையும் தம்மிடம் ஈர்க்கின்றன. உள்ளே அடக்கமாய்ச் சாறு மிகுந்து பழுத்து நிறமும் மணமும் சுவையும் மென்மையும் கவர்ச்சியும் இயல்பாகவே பரவுதலால், அனைவரும் அவற்றை விரும்பும்படி நேர்கின்றது.

ஆதலால், அடக்கத்தால் ஆற்றல் பெருகுகின்றது; கனிவு மிகுகின்றது; கவர்ச்சி சிறக்கின்றது; இயல்பாகவே பரவுதல் பெறுகின்றது; உணர்வார் உள்ளத்தைத் தொடுகின்றது; ஈர்த்து நலம் அடைகின்றது என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம்; நலங்களைத் தக்கோர் வாயிலாக அறநெறியில் இயல்பாகப் பெறுதற்கு அடக்கம் ஒரு தக்க வாய்ப்பாதலை நன்கு துணிகின்றோம்.

அப்படியிருக்கும்போது, மன மொழி மெய்களை உண்மையில் நிறுத்துதலாகிய அடக்கத்தை மக்கள் மேற்கொண்டு, நலம் வரும் வழிகள் தாமே கிளைத்துக்கொண்டு வந்து சேரும்படி, எளிதாகவும் இனிதாகவும் இயல்பாகவும் இருப்பது எவ்வளவு நல்லது! வேறு விளம்பரத்துக்கு ஏன் அலையவேண்டும்?

செறிவறிந்து சீர்மை பயக்கும்,
அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

அறிவு அறிந்து – உண்மையறிவை அறிந்து, ஆற்றின் அடங்கப் பெறின்—அதற்குரிய நெறியில் அடங்கி நடக்கப் பெற்றால், செறிவு அறிந்து சீர்மை பயக்கும்—அவ்வடக்கம் தக்கோரால் அறியப் பெற்று மேன்மையை உண்டாக்கும்.

அறிந்து – அறியப்பெற்று; சீர்மை – வாழ்க்கைச் சிறப்புகட்குரிய மேன்மைகள். ஆற்றின் அடங்குதலாவது, மன மொழி மெய்கள் ஒத்து, நிலைமைக்கேற்ப உண்மையொடு மாறாகாமல் ஒடுங்கியும் ஒன்றியும் இணங்கியும் இணைந்தும் அடங்கியொழுகுதல்.

செறிவு, அடக்கம்; ஆற்றல் நெருங்கிச் சிறத்தலின் அப்பெயர் பெற்றது.

அடக்கம் என்னும் பண்பு மிகவும் ஆற்றலுடையதாகலின், இயல்பாகவே அது தக்கோர் உள்ளங்களில் இணைந்து அவரால் சீர்மைகள் பெறும் என்றற்கு, 'செறிவு சீர்மைகள் பயக்கும்' என்றும், 'அறிந்து சீர்மை பயக்கும்' என்றுங் கூறினார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | விசய, பங்குனி, | தளிர் |
|---|---|---|
| 6 | 26-3-54 வெள்ளி. | 23 |


குருகுலத்தார்க்கு:

# குருகுல விழாவும் அதன் நோக்கமும் பயனும்

நம் குருகுலம் பொதுவாக மக்கள் எல்லாருடைய நலங்கட்கும், சிறப்பாக அதன் அன்பர் மாணவருடைய வாழ்க்கைத் தூய்மைக்கும் முன்னேற்றத்துக்கும் மன மொழி மெய்யென்னும் மூன்றானும் தொண்டுகள் செய்கின்றது.

அதன் தொண்டுகள் நினைவு இயக்கம், உணர்வு உந்துதல், உள்ளப் பிணிப்பு, திருவருட் பதிவு, ஒருமை, இணக்கம் என்னும் உள்ளத் தொண்டுகளாகவும்; பாடம், விரிவுரை, அறிவுரை, கருத்துரை, அருளுரை என்னும் உரைத் தொண்டுகளாகவும்; வெளியீடு, பள்ளி, விடுதி, பண்ணை, தொழில் முதலிய உடல் தொண்டுகளாகவும் அரும்பி மலர்ந்து வருகின்றன.

அதன் சார்பில் மாம்பாக்கத்தில் உருவாகிவரும் திருக்குறட் செயலகத்தில் அமைந்துள்ள பள்ளியிலும் பிற அமைப்புகளிலும் சிறுவர் சிறுமியர்களும், தகுதியும் வேட்கையும் உடைய இளைஞர் முதியவர்களும் சேர்ந்து அவரவர்கள் நிலைக்கேற்ப மொழி, கலை, தொழில், அருள், பணி என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளில் பழகிவருகின்றனர் மேன்மேற் பலரும் சேர்ந்து பழகவும் வாய்ப்புண்டு.

இனி, குருகுல ஆசிரியர் நலங்களோடு கலந்து பழக விரும்பும் மற்றவர்கள், நாடு, மொழி, சமய, இனவேறுபாடுகள் கருதாமல் தத்தம் இருப்பிடங்களில் தத்தம் தொழில்களில் இருந்துகொண்டே தொடர்பு கொண்டு குருகுலத்தின் கொள்கைகளையும், செய்கைகளையும் அறிந்து இயன்ற அளவு கடைப்பிடித்து நலம் பெறலாம்.

இவ்வகையில் குருகுல மாணவராகவும் அன்பராகவும் தம்மைப் பதிவு செய்துகொண்டு சான்றாண்மையிற் பழகி வரும் அன்பர்கள் நூற்றுக்கணக்கில் அங்கங்கும் உள்ளனர் சென்னையில் மட்டும் 500-க்கு மேற்பட்டவர்கள் தனித்தும் தம் குடும்பத்தோடும் குருகுலத்துடன் தொடர்புற்றிருக்கின்றனர்.

தமிழகத்தின் தலைநகரில் உள்ள அவர்களையும், மற்ற இடங்களிலுள்ள குருகுலத்தாரையும், பொது மக்களையும் இணைத்து அவர்கட்கும், அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், பெரு மக்கள் பலருக்கும் குருகுலத்தின் கொள்கைகளையும் செய்கைகளையும், ஆசிரியரால் நெடிது நினைந்து வகுக்கப்பட்டுள்ள பணித்திட்டத்தையும் (நிர்மாணத் தொண்டுகளையும்) நன்றாக விளக்கித் தெரியவைத்து, மாம்பாக்கத்தில் நடைபெறும் செயல்முக அமைப்புக்கும், நாடுமுழுதும் விரிவாக நடைபெறவேண்டிய (பணித்திட்டத்தின்படி பன்னிரு பிரிவாகவுள்ள) மக்கட்பணிக்கும் வளர்ச்சி மிகுவிப்பதற்காக 28-3-54 ஞாயிறன்று சென்னைப் பூக்கடை மல்லீச்சுவரர், திருக்கோயிலில் குருகுல விழாச் செய்யப்பெறுகின்றது.

விழாவில் நம் சென்னை முதலமைச்சர் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களும், கல்வி நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், அறநிலைய அமைச்சர் கே. வேங்கடசாமி நாயுடு அவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள்.

அதற்கு முன், விழா 19-3-54 மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயிலில் தொடங்கியது. அதுமுதல் 27-3-54 வரை இவ்விழாவை ஒட்டி ஒன்பது நாட்கள் சென்னையின் ஒன்பது பகுதிகளில் திருக்குறளின் ஒன்பது இயல்களைப் பற்றியும், குருகுலத்தைப் பற்றியும் இயக்கச் சொற்பொழிவுகள் உண்டு. இந்நாட்களிலும் இந்து அறநிலைக் கழகத் தலைவர் திரு. சங்கரவடிவேல் அவர்களும், சென்னை அரசின் அமைச்சர்கள் திரு. கே. இராசாராம் நாயுடு, திரு. கே. எம். மாணிக்க வேலர் அவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். இந்நிகழ்ச்சிகளின் போது பேரறிஞர்கள் பெருமக்கள் பலரின் ஆக்கச் சொற்பொழிவுகளும், அறிவு அறவுரைகளும் நிகழ்தற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கின்றன.

பொதுவாக எல்லாவற்றிலும், சிறப்பாக விழாவிலும் குருகுலத்தார் அனைவரும் ஊக்கமும்

ஆர்வமுங்கொண்டு தமருடன் ஈடுபடுவதும் மற்றவர்களை ஈடுபடச் செய்வதும் முதன்மை!

விழாவன்று மாம்பாக்கம் செயல்முக அமைப்பில் இதுகாறும் அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் பட்டியல் படிக்கப்படும். அதிகாரச் செய்கை ஏற்க விரும்பும் ஏனைக் குருகுலத்தார், விழாவுக்குள் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இதுவரையிற் சேர்ந்துள்ள குருகுலத்தாரில் அதிகாரச் செய்கை ஏற்கும் கடைசி நாள் விழா நாள்தான். செய்கையில் விருப்பமுடையோர் இதில் பெரிதும் கருத்திருத்துவாராக!

இதோடு விழாவன்று பிற்பகல் நிகழ்ச்சிக்கு முன் நடைபெறும் குருகுலத்தார் தனிக் கூட்டத்தில் மேலே குறிப்பிட்டபடி பன்னிரு பிரிவாக நடைபெற வேண்டிய மக்கட்பணிகளைத் தொடங்கித் தொடர்ந்து செய்யச் செயற்குழுக்கள் அமைப்பது முதலாயின நிகழும். ஆர்வமுள்ள பிரிவுகளில் அவரவரும் பங்குகொண்டு பணியாற்ற முந்திக்கொள்ளலாம்.

விழாவின்போது வருகின்ற பொதுமக்களும், பெருமக்களும் குருகுலத்தாரிடம் அமைந்துள்ள பல்வேறு ஆற்றல்களையும் அறிந்து மகிழ்கிறமாதிரி ஒரு கண்காட்சி அமைக்கவும் எண்ணியிருக்கிறது. எனவே, குருகுலத்தாரனைவரும், தம்முடன் தம் குடும்பத்தவரும் பெற்றுள்ள ஆற்றல்களுக்கு அடையாளமான பொருள்களை (ஓவியம், சிற்பம், பல்வேறு கைதொழிற் பொருள்கள், கலைப் பண்டங்கள், கவிதைகள், நூல்கள், கட்டுரைகள் முதலியன) எல்லாம் 21-3-54 ஞாயிறுக்குள், அவரவர் பெயர்க் குறிப்புடன் ஆசிரியரிடம் சேர்க்கவேண்டும். விரும்புவோர் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம். திறமை மிக்க பொருளுக்கு, விழாவின்போது பரிசும் வழங்கப்படும்.

விழாவின் நோக்கமும் பயனும் இத்தகைய ஆக்கச் செயல்களில் சிறப்பாகப் பலரும் ஈடுபடவும், பலரையும் ஈடுபடுத்தவும் ஊக்கவுமே ஆகலின் குருகுலத்தாரனைவரும் இவற்றில் தம் கடமையறிந்து பண்டங்களைத் தொகுத்து அளிக்க முன்வர வேண்டும்.

# செம்பியன் மாதேவியார்

இவர் சைவம் தழைத்தோங்குமாறு நீண்டகாலம் உயிர் வாழ்ந்தார். கண்டராதித்தர், உத்தம சோழர், முதலாம் இராசராசசோழர் என்ற மூன்று மன்னர்கள் காலத்தில் இவர் வாழ்ந்திருந்தனர். முதலாம் இராசராசசோழரின் பதினாறும் ஆட்சியாண்டில் அதாவது (985-16) கி. பி. 1001-ல் இறைவன் திருவடி நீழலடைந்தார்.

இவ்வம்மையாரது வாழ்க்கை முறை செல்வராய்வாழும் மகளிர் பலரும் பின்பற்றத் தக்கதாகும். இவ்வம்மையாரது குலம்:

செங்கற்பட்டு ஜில்லா திருமுல்லைவாயில் திருக்கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான உத்தமசோழ தேவர்க்கு யாண்டு ௰௪-வது மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார் பக்கல் புழற்கோட்டத்து அம்பத்தூர் நாட்டு அம்பத்தூர் ஸபையோம் பொன் எண்பதின் கழஞ்சு கொண்டு (S I I Vol III, PartIII Page 287) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அம்மையார் மழவரையர் மகளார் என்று பெறப்படுகிறது. பத்துப் பாட்டில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் மழவர் என்ற சொல்லுக்கு, சிலவீரர் என்று பொருள் கூறியுள்ளனர் உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர். 'ஒண் சிலை மழவர்', 'உருவக் குதிரை மழவரோட்டிய'. என்னும் அகநானூற்று அடிகளால் மழவர் சிறந்த வில்லாளிகளாகவும், குதிரை வீரர்களாகவும் விளங்கியிருந்த செய்திகள் புலப்படுகின்றன.

அதிகமான் நெடுமானஞ்சியை ஔவையார் புறநானூற்றில் (90-ஆம் பாடல்) 'வழுவில் வண்கை மழவர் பெரும' என்று விளிப்பதாலும், 'இரும்பனம் புடையல்' (புறம் 99) அதாவது பெரிய பனந்தோடாகிய தாரினை உடையவன் என்பதாலும், அதற்கு உரையாசிரியர், 'இவனுக்குப் பனந்தார் கூறியது சேரமாற்கு உறவாதலின்' என்று குறிப்புரை எழுதியதாலும், மழவர் தலைமகனாகிய நெடுமானஞ்சி சேரமன்னரின் ஒரு கிளையினன் என்று பெறப்படுகின்றது

வடார்க்காடு ஜில்லா போளூர் திருமலைக் கல்வெட்டில் காணப் பெறும்:—

"வஞ்சியர் குலபதி யெழுனிவகுத்த
வியக்கரிபக்கியரொ
டெஞ்சிய வழிவுதிருத்தி
வெண்குணவிறை திருமலை
வைத்தான்
அஞ்சிதன் வழிவருமன்
வழிமுதலிகவி அதிகனவன் நூல்
விஞ்சையர் புனைத கமையர் காவலன்
விடுகாதழகிய பெருமாளே"

என்னும் கல்வெட்டு, அஞ்சியின் மகன் எழுனி வஞ்சியர் குலபதி என்பதைக் காட்டுகின்றது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# * ஈரடி இருநூறு*

நூலாசிரியர் – திரு கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.

(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

## அதிகாரம் 18.

## போர்

அஃதாவது உரிமை கொள்ளு மிடத்து ஒரோவொருகால் நேர் தற்குரிய போரின் இயல் கூறு தல். அதிகார முறைமையும் காண்க.

1\. மூண்டதுபோர் காணுங்கால்
மாண்டது நல் வாய்மை
மாண்டார் பின் மக்கள் பலர்.

உலகத்திற் போர் மூண்டது; உற்று நோக்குங்கால் உயர்ந்த அறமாகிய மெய்ம்மை மாய்ந் தது; அதனால் மக்கள் பலர் பின்பு போரில் மாய்ந்தனர்.

வாய்மை மாய்ந்தால் போர் மூளும்; மக்கள் அழிவர் என்ப தாம். தீமையிலாததும் புரை தீர்ந்த நன்மை பயப்பதும் வாய்மை என்பவாகலின் 'நல் வாய்மை' என்றார்.

2\. படை பொருது பட்டார்
பலரென்ப பற்றின்
இடைமுரிந்த எண்ணில்
உளம்

படையொடுபோர் செய்து அழிந்தோர் பலராவரென்று உலகோர் சொல்லுவர்; ஆனால் அவராக் காரணமாகப் பொருந் தாச் செயல் தொடுத்து இடையே நிலை குலைந்தவை அறி வற்ற உயிர்களாகும்.

அவரினும் பலவென்றற்கு 'எண்ணில் உளம்' என்றார். *'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' என்புழிப்போல உளம் ஈண்டு ஆகுபெயராய் உயிர்களை உணர்த்தி நின்றது.

* சிவஞானபோதம், 10.

கருவியாய்ப் பயன்படுதலின் இங்ஙனம் உள்ளத்தின் மேல் வைத்துக் கூறினாரென்க. பற்றி னால் மிகப் பலராய்த் தாங் கெடு தலையன்றி நாட்டிற் போர்க் கொடுமையை எழுப்பிக் கடமை வீரரையும் மாய்த்தலின் மாந்தர் அழிவிற்கும் நாட்டிற் போர்உண்டாதற்கும் காரணமா கிய பற்றென்பது படையினுங் கொடிதாதல் பெற்றாம். இவை இரண்டு பாட்டானும் போர்க் குக் காரணங் கூறினார்.

3\. குருதி கடலென்ப
கொல்போரால், கண்ணீர்
பெருகுதல் காணா தவர்.

வீரரைக் கொல்லுதற்குக் காரணமான போர் நிகழ்ச்சியி னால் அவருறவினரும் நாட்டு மக்களுமாகிய ஏனைபோர் கண் களிற் கண்ணீர் ஊழி வெள்ள மாய்ப் பெருகுதல் காணாதவரே, போர்க்களத்தில் அவ்வீரர் சிந்திய செந்நீரை அதன் மிகுதி கருதிக் கடலென்று வியந்து கூறுவர்.

சிந்திய செந்நீரினும் சிந்துங் கண்ணீரே அளவினுங் கொடு மைப் பயனிலும் மிகுதி என்பது கருத்து. நாட்டவர் அல்லற்பட் டாற்றாது அழுத கண்ணீரினுஞ் செல்வத்தைத் தேய்க்கும் படை பிறிதின்மையானும், போரினால் வீரரெய்துந்துயரத்தினும் நாட்ட வர் எய்துந் துயரம் பெரிதாதலா னும் அதனைப் பொருள் செய்க வென்பதூஉம், களத்தில் வீரரை மாய்க்கும் ஆண்மையினும் நாட் டவர் துயரத்தைக் காக்கும் பெருந்தன்மையே பேராண்மை யெனப்படுதலின் போர் விரும் பத் தக்கதன்றென்பதும் இதனால் விளக்கினார்.

4\. பொருது பகையழிப்போர்
ஏற்றூன் பண்பு
இருள் களைய
ஊர் எரிப்ப தற்று.

பகைமையைப் போர் செய்து கெடுக்கும் பொருட்டுப் போர் வினையை மேற்கொண்டானது இயல்பு, ஒளியால் இருளை நீக் கும் பொருட்டு ஊரை எரிப்பத னோடொக்கும்.

அழிவல்லது கருதிய பயன் உண்டாகாதென்பதாம். பகை அப் பண்புணர்த்திற்று; வருஞ் செய்யுளிலும் இவ்வாறே கொள்க. ஊர் எரிப்பதற்றென் னும் உவமையால், பொருவார் இருதிறத்தாருங் களத்தில் அழி தலோடு நாடும் அழியுமென்பது பெற்றாம்.

5\. அடிகளைந்துந் தோன்றுவ
அற்ப முடிகாண்
படையால் பகையழித்தல்
இல்.

அடிமரத்தை வெட்டிய பின் பும் சிறு தளிர் நுனிகள் முளைக் கும் இயல்பினவாப்; ஆதலின், வெட்டுங் கருவியாகிய படையி னால் பகைமையை முற்றும் அழித் தல் இல்லை என்க.

பகைமை எழுதற்குரிய காரணத்தை ஆராய்ந்து களைக என்றவாறு. அடி-, ஆகுபெயர்;

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

**AVANASHI ROAD,**

**COIMBATORE.**

தோன்றுமென்னாது தோன்றுவ என்றார், அவற்றின் இயல்பின்னதென்றற்கு. அற்பம், சிறுமையுணர்த்திற்று. காண், முன்னிலை அசை.

6. வென்றாரை வெல்லும் வல்
வித்திடுதல் அல்லால் போர்
வென்றாரும் நின்றமைவ தில்.

போர் என்பது வெற்றியெய்தினாரை மீண்டும் வெல்லும் பொருட்டு வலிய விதையிடுதலாம்; அஃதல்லது, வெற்றியெய்தினார் எய்தின நிலையிலேயே நிலைத்து முடிவான அமைதியுறுதற்கு அது கருவியாவதில்லை.

'வித்திடுதல் போர்' என மாறுக. போர், மீண்டும் மீண்டும் போர்க்கே இடஞ் செய்யுமல்லது நிலையான அமைதியை நாட்டிற்கும் வென்றார்க்கும் உண்டாக்காதென்றவாறு. மீண்டும் போர் விளைத்தலின் 'வித்'தென்றும், அது திண்ணமாதலின் 'வல் வித்'தென்றுங் கூறினார். அமைவதற்கென்னும் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இவை மூன்று பாட்டானும் பகை கெடுத்தற்குப் போர் கருவியாகாமை கூறினார்.

7. ஒருகொலைக்கே மன்றம்
ஒறுதண்டம் போரின்
பலகொலைக்கோ பற்றார்
முறை.

ஒரு கொலைச் செயலுக்கே அறமன்றம் ஒறுக்குந் தண்டனை விதியைப், போரினால் நிகழும் பல கொலைகளுக்கு அவற்றிற்கேற்ற முறைப்படி அவை செய்தார் பற்றாதொழிவரோ!

பற்றுதல் திண்ணமென்றபடி. போர்க்களத்தில் ஒருவர் பலரைக் கொல்லல் கூடுமாகலின் 'பல கொலை' என்றார்; கொலையும் தண்டமும் ஆகுபெயர். ஓகாரம் பிரித்துக் கூட்டுக நிகழ்வது போரேயாயினும் அதன்கண் கொலைக் குற்றம் உண்மையின் அக் குற்றத்தினின்றுந் தப்புதல் ஏலாதென்பது இதனால் விளக்கப்பட்டது.

8. போர்க்கெழுவார் மக்களோ
பொய்யெழும் மெய்யறத்தைப்
போரடூஉம் புன்மை மறம்.

போர் செய்தற்கு எழுவார் மக்களோ அல்லர், பொய்மையே எழும்; சிறுமையியல்பாகிய தீமை மெய்ம்மை வாய்ந்த நன்மையைப் போரிற் கெடுக்க முயல்கின்றது.

மக்கள் உள்ளத்திலுள்ள பொய்யே போர்க்கெழுதலின் மக்களல்லரென்றார். ஓகாரம், எதிர்மறை. அடுதல் போனுதலின் அடூஉமென்றாராயினும் அஃதியலாதாகலின் அடமுயலுமென்பது உரையாயிற்று. ஈண்டு அறம் மறம் என்பன முறையே † நன்மையையும் தீமையையும் உணர்த்தும்.

9. போரெனும் பாவி புறப்படின்
போயொளிப்ப
சீர்சிறப்புச் செல்வம் இவை.

போர் என்னும் ஒரு கொடுமை நாட்டில் எழுந்தால் நாட்டின் நன்மை தலைமை வளம் என்னும் இவை முதலாயின நீங்கி மறைந்துவிடும்.

நாட்டின் நலமெலாம் ஒருங்கு கெடுத்தற் கொடுமை பற்றிப் 'பாவி' யென்றார். பண்பை அஃதுடைய பண்பிபோற் கூறினார். அது தானே செய்வது போறலின்; 'அழுக்காறென ஒரு பாவி' யென்றார், பிறரும். இவை இரண்டு பாட்டானும் போரினால் அறம் முதலியவற்றிற்கும் இழுக்குண்டாதல் தெரிவித்தார்.

10. மீண்டும் வருங்கொல் போர்
மீக்கொள்ள வெந்துயரம்
மாண்டவை மண்கொண் டில.

கொடிய துயரம் நாட்டில் மேலோங்கும்படி திரும்பவும் போர் தோன்றும் போலும்; முன்னைப் போரினால் இறந்துபோன வீரர்களின் உடம்புகளை இன்னும் சரியாக மண் தன் வண்ணமாக்கிக் கொள்ளவில்லையே.

இலதென்பது இலவென நின்றது. கொல், ஐயம். இறந்த உடம்புகள் மண்ணாவதற்கு முன்பே மீண்டும் போர் தோன்றும் போலும் என ஐயுற்று இரங்கினார்; போர், மிகவிரைவில் மற்றொரு போரைத் தோற்றுவித்துக் கொண்டு மேலும் மேலும் தொடர்தலின், 'மாண்டவை மண் கொண்டில' என்பதற்கு, அப் போர் நிகழ்ச்சிகள் மாண்டு மண் கொண்டிலவே என்று வருத்தத்தால் உரைத்தாரெனினும் அமையும். போர் மற்றொரு போர்க்குக் காரணமாதல் இதனால் தெளிவிக்கப்பட்டது.

† இறைய, 29.


தங்களுக்குத் தேவையான
எல்லா விதமான மருந்து வகைகளும்
எங்களிடம் எப்பொழுதும்
கிடைக்கும்.

**மேயர் அண்டு கம்பனி,**

இங்கிலீஷ் மருந்து வியாபாரிகள்,
16. ஐயா பிள்ளை தெரு,
பி. டி. சென்னை-3.

டெலிபோன் 3757 போஸ்டு பாக்ஸ் நெ 504.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வஞ்சியர் குலபதி என்பது சேரர் குலத் தலைவன் என்று பொருள் படும். இதுகாறும் இலக்கியம், கல்வெட்டு இவைகளைக் கொண்டு ஆய்ந்தவரையில் மழவர் தலைமகனாகிய அதியமான் சேரனின் கிளையினன் என்பது தெற்றென விளங்குகின்றது. செங்கற்பட்டு ஜில்லா திருமுல்லைவாயில், (வட திருமுல்லைவாயில்) தஞ்சாவூர் ஜில்லா திருவெண்காடு கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில், செம்பியன் மாதேவியார் மழவரையர் மகளார் என்று குறிக்கப்பட்டிருப்பதால் அவர் சேரர் குலத்தினர் ஆவர்.

இவரது திருநட்சத்திரம்:-

[இவர் பிறந்தது திருக்கேட்டை நாளாகும். இச் செய்தி "ஸ்ரீ மதுராந்தக தேவரான உத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த பிராட்டியார் செம்பியன் மாதேவியார் திருநக்ஷத்திரமான திருக் கேட்டைதோறும் பெரும்பலி எழுந்தருள ஓராட்டைக்கு வேண்டும் நெல்லு எழுபதின் கலத்துக்குத் திருத்துருத்தி திரு நல்லத்தில் ஒன்பதின் மா முந்திரிகைக்கீழ் காலேய் முந்திரிகை" (S. I. I Vol III Part III Page 314 Line 28) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

பண்டுளோர் இவரைப் பாராட்டியவிதம்:-

முதலாம் இராசராசசோழன், குலமாணிக்கமாகிய நம் பிராட்டியார் செம்பியன் மாதேவியார் என்று இவரைப் பாராட்டியுள்ளான். தன் குலத்துக்கு மாணிக்கம் போன்றவர் என்பது அத் தொடரின் பொருளாகும். [நம்பிராட்டியார் என்பது நமக்குப் பெருமையுள்ளவர் என்ற பொருளில் இங்கே அமைந்துள்ளது.] திருமழபாடிக்கு அருகில் குலமாணிக்கம், செம்பியன்மாதேவி என்னும் இரு ஊர்கள் இருக்கின்றன. அவை இவ்வம்மையாரின் திருப்பெயரால் எடுப்பிக்கப் பெற்றனவாகும். இவற்றுள் செம்பியன்மாதேவி என்பது இக்காலம் செம்பியக்குடி என்று வழங்கப்பெறுகின்றது. கிழக்கு மேற்கில் உள்ள ஒரு நீண்ட தெருவின் ஒரு பகுதிக்குக் குலமாணிக்கம் என்றும் மற்றொரு பகுதிக்குச் செம்பியக்குடி என்றும் பெயர்கள் இருப்பதால் இக்காலம் இரண்டு ஊர்களாய்ப் பிரிந்திருக்கும் இவ்வூர், முற்காலத்தில் குலமாணிக்கம் செம்பியன்மாதேவி என்னும் ஒரே பெயருடன் திகழ்ந்திருத்தல் வேண்டும்.

திருமழபாடிச் சிவன் கோயிலில் இருந்த ஒரு அளவு கருவிக்கு இவ்வம்மையாரின் திருப்பெயர் இடப்பெற்றிருந்தது. நாகப்பட்டினம் தாலூகாவிலுள்ள செம்பியன்மாதேவி சதுர்ப்பேதி மங்கலம் இவர் பெயரால் அமைந்ததாகும். அது க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு அளநாட்டுப் பிரம்மதேயமாகிய செம்பியன் மாதேவி சதுர்ப்பேதி மங்கலம் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள கைலாசமுடையார். கோயிலில் முதல் இராசராச சோழனது மகனாகிய கங்கைகொண்ட சோழன் இவ்வம்மையாரது பிரதிமத்தை எழுந்தருளுவித்திருந்தான். அது இப்பொழுது அங்கு இல்லை. இன்னணம் பண்டையோர் இவரைப் பாராட்டினர்.

இன்றுளோர் செய்யவேண்டுவன:

இவரால் கட்டப் பெற்ற இவரது புகழுக்குநிலைக்களமாய்விளங்கும் திருக்கோயில்களில் செடி கொடிகள் முளையாவண்ணம் புரந்து வருவது இன்றுள்ள தமிழ்ச் சைவ நன்மக்கள் ஒவ்வொருவரின் தனிப்பெருங் கடமையாகும்.

இவரால் கட்டப்பெற்ற திருநல்லம் கோயில் தென்புறச் சுவரிலும், ஆனாங்கூர் அகத்தீச்சுரத்து அர்த்தமண்டபத்துத் தென்புறச் சுவரிலும், திருத்துருத்திச் சொன்னவாறு அறிவார் கோயில் அர்த்தமண்டபத்தின் தென்புறச் சுவரிலும், இவரது திருமேனி செதுக்கப் பட்டுள்ளது. அதற்கு எண்ணெய் திட்டிப் பாதுகாப்பது மேற் சொல்லப் பட்டோரின் கடமையாகும்.

செம்பியன் மாதேவியாரின்
சீர்த்தி ஓங்குக.

**Phone 55034 Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

**பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# திருவாவடுதுறை ஆதீனம்

## 18. சுப்பிரமணிய தேசிகர் 1920—1922.

ஸ்ரீ அம்பலவாண தேசிகர் தமக்குப்பின் வைத்தியநாத தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் என்னும் தீட்சா நாமமும் கொடுத்துப் பட்டத்திலமர்ந்தருளச் செய்தார்கள். இவர்களைக் கழுக்குன்றம் பண்டாரச் சந்நிதி என்பர்.

## 19. வைத்தியலிங்க தேசிகர் 1922—1937.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப் பின்பு பட்டமேற்றவர்கள் ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள். தக்ஷிணத்திலே காறுபாருக நீண்டகாலம் இருந்து சிறந்தவர்கள். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப்பின் அவர்களால் ஆசாரியாபிடேகம் செய்யப்பெற்று 1922-ல் பட்டம் ஏற்றார்கள். மாயூரத்திலே இவர்கள் சிவபரிபூரணமாயினர் (கி. பி. 1937-ல்)

## இருபதாவது குருமகா சந்நிதானம்

## ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## 1937—1951.

ஸ்ரீ அம்பலவாண தேசிகபரமாசாரிய சுவாமிகள் தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிச் சீமையிலே கொற்கை நகரத்திலே அவதரித்தவர்கள். கல்வி கற்றுச் சிறந்து தமது பத்தொன்பதாம் பிராயத்திலே இவ்வாதீனத்தைச் சேர்ந்த செவ்வந்திபுரத்திலே தட்சிணம் காறுபாருக அப்போது எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைத்தியலிங்கத் தம்பிரான் சுவாமிகளை அடைந்து தமக்குள்ள துறவு விருப்பத்தையும், இவ்வாதீனத்துத் திருக்கூட்டத்திலே சேர்ந்திருக்கும் மீதூர்ந்த ஆசையையும் தெரிவித்தார்கள். அவர்கள் இவர்களைச் சோதித்து வேதாந்த நூற் பயிற்சியால் உண்டாகிய துறவுள்ளத்தைக் கண்டு வியந்து இவ்வாதீன முறைப்படி கல்லாடையும் அருளினார்கள். பிள்ளைத் திருநாமம் வைகுண்டம் பிள்ளை என்பது. தீட்சா நாமம் வைத்தியலிங்கத் தம்பிரான் என்பது. பின்பு திருவாவடுதுறை ஆதீனத்திலே அப்பொழுது 17-வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளைத் தரிசித்து அவர்கள் கட்டளைப்படி அணுக்கத் தொண்டுகள் செய்துகொண்டு இவ்வாதீன வித்துவானாக இருந்து பின்பு, மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே சைவ நூற் பரிசோதகராக ஸ்ரீமான் பாண்டித் துரைச்சாமித் தேவர் அவர்களால் நியமிக்கப் பெற்றுப் பல நூல்களை அச்சிட்டுதவியும், பல நன் மாணவர்கட்கு இவ்வாதீனத்துக் கல்வியை முறையாகப் பயிற்றியும் விளங்கிய சேற்றூர் ரா. சுப்பிரமணிய கவிராயர் அவர்களிடத்துத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் முறையாகக் கற்றார்கள். திருமுறைகளிலும் நல்ல பயிற்சி பெற்றார்கள். திருமூல நாயனார் அருளிச்செய்த திருமந்திர மாலையிலே அவர்கட்கு மிகப் பற்றிருந்தது. பதினேழாவது மகாசந்நிதானத்தின்பால் இருவகைத் தீட்சையும் மந்திர காஷாயமும் பெற்றார்கள்.

பின்பு, திருப்பெருந்துறைக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாக இருந்து பணியாற்றி வந்த காலத்திலே யாவரும் அதிசயிக்குமாறு அவர்கட்குத் திருமந்திர உபதேசம் கிடைத்தது. ஸ்ரீ வித்யா உபாசனையும் உடையவரானார்கள். அதன் பின்பு அவர்களுடைய நிர்வாகத் திறன் முதலிய எல்லாவற்றையும் கருதி இவ்வாதீனத்துப் பத்தொன்பதாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் திருவிடைமருதூர் கட்டளையில் வைத்தருளினார்கள். திருப்பெருந்துறை, திருவிடைமருதூர், மாயூரம் முதலிய இடங்களில் கட்டளையிலிருந்து மிகவும் நன்றாக நிர்வாகம் செய்து மகாசந்நிதானத்துக்குத் திருவுள மகிழ நடந்துகொண்டார்கள். ஆதலால் ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் தமக்குப்பின் அவர்களையே பட்டத்திலிருத்த நன்கு திருவுளம் பற்றியிருந்தார்கள். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக பரமாசாரியருடைய திருவருட் குறிப்பும் அவர்கள்பால் சிறந்தோங்கியது. அதனால் ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் ஈசுவர ஆண்டு ஐப்பசித் திங்கள் 24-ம் நாள் செவ்வாய்க் கிழமை அபிஷேகம் செய்து அம்பலவாண தேசிகர் என்னும் அபிதானமும் அருளித்தாம் 26-ஆம் நாள் வியாழக் கிழமையன்று மாயூரத்திலே சிவபரிபூரண மெய்தினார்கள். தமது [illegible]நுடைய குருமூர்த்தம் [illegible] குருபூசை சிறப்பாகச் செய்து ஞானபீடத்

தெழுந்தருளியிருந்து ஞானச் செங்கோல் செலுத்தினார்கள். அவர்களுடைய அவதார தினம் மன்மத — மார்கழி — ரோகணி நாள் தாம். பீடாதிபதியாக எழுந்தருளிய காலந் தொடங்கித் தமது ஆதீன முன்னேற்றத்தையே மிகவும் திருவுளத்தடைத்து எல்லா வகையிலும் சிறப்புறச் செய்தார்கள். பொது மக்களுக்கு வேண்டிய கல்வி மருத்துவம் முதலிய இன்னோரன்ன உதவிகள் பல செய்தார்கள். செந்தமிழ் மொழி வளர்வதற்கு ஆவன எல்லாம் சிறக்கச் செய்வித்தார்கள். ஆதீன வித்துவான்களைக் கொண்டு அரிய நூல்கள் பல ஆராய்ந்து அச்சிடுவித்து அன்பர்கட்கெல்லாம் அளித்தருளினார்கள். காட்சிக்கு எளியவர்களும், கடுஞ் சொல் இன்னதென்பதை அறியாத சாந்த சீலர்களும் ஆகிய மகா சந்நிதானம் அவர்கள் அன்பர்களும் அடியார்களும் வேண்டிக்கொண்டபடி தென்னாட்டுச்சிவதல யாத்திரைக்குத் தம்பிரான் சுவாமிகள் அனைவருடனும் எழுந்தருளி அங்கங்கே சிவதரிசனம் செய்து வழிபாடாற்றி அடியார்கட்குக் குரு தரிசனக் காட்சியும் தந்து உலகமெல்லாம் ஒருங்கே குதூகலிக்கத் திரும்பி விகிர்தி—தை-29 உ தமது சிவராசதானியாகிய திருவாவடுதுறைக்கு எழுந்தருளிப் பரமாசாரியராகிய ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகமூர்த்திகள் குருபூசையும் சிறப்பாகச் செய்வித்து யாவரும் மகிழ வீற்றிருந்தருளினார்கள். யாத்திரை செய்து வந்த காலத்து இடைவிடாத யாத்திரையால் உண்டான திருமேனிப் பாங்கின் குறைவால் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் திருவிடைமருதூரிலே விகிர்தி—பங்குனி 30-ஆம் நாள் வியாழக்கிழமை சிவபரிபூரண மடைந்தார்கள். புகழுடம்பில் நிலைபெற நின்றருளுகின்றார்கள்.

## 21 ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரியர்

இவர்கள் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளுக்குப் பின் ஞானபீடத்தில் எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் கைக்கொண்டு சிவராசதானியாகிய திருவாவடுதுறையிலே சிவக்ஷேத்திர பரிபாலனமும் குருக்ஷேத்திர பரிபாலனமும் வித்யாபரிபாலனமும் செய்துவருகின்றார்கள்.

நீடு வாழ்க.

## இவ்வாதீனத்திலே கல்விகற்றுச் சிறந்தவர்கள்

வேலாயுத முனிவர், அம்பலவாண முனிவர் தருமபுரம் பரமசிவத் தம்பிரான் சுவாமிகள், மதுரை இராமசாமி பிள்ளை பழநிக் குமாரத் தம்பிரான் சுவாமிகள், அநந்த கிருஷ்ண கவிராயர், சண்பகக் குற்றாலக் கவிராயர், சிலேடைப்புலி—பிச்சுவையர், இராயசம்— பொன்னுசாமி செட்டியார், சேற்றூர்க் கந்தசாமிக் கவிராயர், சுப்பு ஓதுவார், சிவதாணுத் தம்பிரான் சுவாமிகள், முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள், பாலசுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள், கனகசபைத் தம்பிரான் சுவாமிகள், புல்க்குட்டி இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், பன்னிருகைத் தம்பிரான் சுவாமிகள், பெரிய பூசை — சுப்பிரமணிய தம்பிரான் சுவாமிகள், விசுவலிங்கத் தம்பிரான்சுவாமிகள், சங்கரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் திருவாவடுதுறை—சண்முகம் பிள்ளை முதலியோர்.

ஸ்ரீ நமச்சிவாய தேசிகருடைய மாணவர்கள்—சேற்றூர் அருணாசலக் கவிராயர், சுப்பிரமணிய கவிராயர், கந்தசாமிக் கவிராயர், சிலேடைப் புலி—பிச்சுவையர் முதலியோர்.

சுப்பிரமணிய கவிராயருடைய மாணவர்கள்—பொன்னோதுவா மூர்த்திகள், சோழவந்தான்—கந்தசாமியார், சர்க்கரை இராமசாமிப் புலவர் முதலிய பலர்.

ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் மாணவர் பொன்னோதுவார், திருப்பனந்தாள் காசி வாசி—சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் முதலியோர்.

பழநிக் குமாரத் தம்பிரான் சுவாமிகள் மாணவர் நீலலோசனி—சதாசிவம் பிள்ளை, பாலவநத்தம் ஸ்ரீ பாண்டித்துரைசாமித் தேவர் முதலானவர்.

மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரது மாணவர்கள் நமச்சிவாய தேசிகர், மதுரை இராமசாமி பிள்ளை, குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், பழநிக் குமாரத் தம்பிரான் சுவாமிகள், செண்பகக் குற்றாலக் கவிராயர், ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள், இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், சூரியனார் கோயில் ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள், உத்தமதானபுரம்—வே. சாமிநாதையர் முதலியவர்கள்.

ஆதீன வடமொழி வித்துவான்கள்: திருக்கோடிகா—கோதண்டராம சாஸ்திரிகள், இராம குட்டி சாஸ்திரிகள் திருவாலங்காடு—விசுவபதி தீட்சிதர், அப்பா தீட்சிதர், அப்பை தீட்சிதர், தியாகராச சாஸ்திரிகள் முதலியோர் சிறந்தவர்கள்.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)